

சென்னை தென்மேற்கு மாவட்டம்,மயிலை கிழக்கு பகுதி வர்த்தக அணி அமைப்பாளர் கே.முரளி தலைமையில்,மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு முன்னிலையில்,மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ,பகுதி செயளாலர் எஸ்.முரளி ஆகியோர் வர்த்தக அணி நிர்வாகிகளுக்கு இனிப்பு,பட்டாசு,மற்றும் பரிசு பொருட்கள் வழங்கினார். இதில் வட்ட செயலாளர் மா.பா.அன்பு,பகுதி துணை அமைப்பாளர்கள் கே.குமரேசன், ஆர்.சுரேஷ், டி.ஜெகதீஷ், பி.கோவிந்த், பசுபதி பிரகலாதன், எஸ்.வேல்ராஜ், கே.பிரபாகரன், டி.துரைசாமி, கே.கணேஷ் கந்தன், சுனில் ஜோஷி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தென்காசிக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி.அக்.20

தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 24-10-2025 ,25-10-2025 ஆகிய நாட்களில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிப்பது மற்றும் ஏற்பாடு தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அணி அமைப்பாளர்கள்,கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பரமகுரு, மாவட்ட பொருளாளர் இல. சரவணன் மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



திராவிட மாடல் முதலமைச்சர் கழக தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 24-10-2025,25- 10-2025 ஆகிய தேதிகளில் வருகை தர உள்ளதை முன்னிட்டு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிற 24-10-2025 அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு சங்கரன்கோவிலில் உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்றும்.பின்னர் 25-10-2025 அன்று தென்காசியில் மங்கம்மா சாலை சந்திக்கும் இடத்தில் பெட்ரோல் பங்க் அருகில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெற உள்ள அரசு நிகழ்வில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நதித்திட்ட உதவிகளை “எல்லாருக்கும் எல்லாம்”என்ற அடிப்படையில் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் கள் வேல்சாமி பாண்டியன்,பத்திரம் சாகுல் ஹமீது,மா.பராசக்தி, மகேஸ்வரி,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன்,கடற்கரை, அன்புக்கரசு,சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை,ராமச்சந்திரன்,வெள்ளத்துரை,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ், அந்தோணிசாமி,நாகூர் கனி,பேரூர் செயலாளர்கள் கே.டி.சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், அணி அமைப்பாளர்கள் முகேஷ், கிப்ட்சன், சிவசங்கரி, அப்பாஸ் அலி, விஜயா, மாடசாமி, பிரேம்குமார், பசுபதி பாண்டியன்,சந்திரன்,முத்துராமன், சாமுவேல்,சரவணக்குமார்,கற்பகம்,

கழக நிர்வாகிகள் அண்ணாமலை, கவிதா, பொன்னுதுரைச்சி, பிரபாவதி மாரியப்பன்,கார்த்தி,ராஜ ராஜன், அன்சாரி, ஜலால் உள்பட கழகத்தினர், சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





